## DEPOSITION OF WITNESS

## In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 11 /2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : ஜெயராமன் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : பாண்டி | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.05.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் குளத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் துப்புரவு பணியாளராக வேலைசெய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்தது. அன்றையதினம் இரவு சுமார் 07:00 மணிக்கு மேல் குளத்துப்பட்டியில் ரோட்டின்மேல் உள்ள எனது வீட்டில் இருந்தபோது டம் என்று சத்தம்கேட்டு வெளியே ஓடிவந்து பார்த்தபோது ரோட்டின் வடக்குபக்கம் புளியமரத்து அருகே எனது பெரியப்பா பாண்டி தலையில் காயங்களோடு கீழே விழுந்து கிடந்தார். நான் அவர் மீது மோதிய வாகனத்தை பார்க்கவில்லை. வாகனம் வேகமாக நிற்காமல் சென்றுவிட்டதால் பார்க்கமுடியவில்லை. அந்தநேரம் எனது பெரியப்பா பாண்டி, அவரது மகளான அசா.1, அவரது பேத்தியான அசா.2 ஆகியோருடன் பேருந்த நிறுத்தத்திற்கு வந்திருந்தார்.

2. அசா.1ஐ பஸ் ஏற்றிவிடுவதற்காக வந்திருந்தார்கள். எனது அப்பா பாண்டி, பெருமாள், சோனைமுத்து ஆகியோர் சம்பவயிடத்தில் இருந்தார்கள். ஆம்புலன் வர தாமதம் ஆனதால் எனது பெரியப்பாவை ஆட்டோவில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு சிகிச்சை பலனின்றி மறுநாள்

இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அசா.1 ரத்தினம் எனது பெரியப்பா மகள் ஆவார். இறந்துபோனவர் எனது பெரியப்பா என்றால் சரிதான். பெரியப்பா இறந்ததற்கு இழப்பீடு பெறுவதற்காக அசா.1 கொடுத்து பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./ Jeyaraman

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.